1995 ஏப்ரல் 18]

335—

சேடர்பாளையம் அரசு உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்

44807*—திருமதி ப. சரஸ்வதி :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமத்தி-வேலூர் வட்டம், நாமக்கல் கல்வி மாவட்டம், சேடர்பாளையம் அரசு உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ; சேடர்பாளையம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கோரி பள்ளிக் கல்வி இயக்குநருக்கு கருத்துரு வந்துள்ளது. உயர்நிலைக் குழுவின் பரிசீலனை மற்றும் பரிந்துரை அடிப்படையில் தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

திருமதி ப. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேருக்கு நேர் சந்திக்க சக்தியற்று போய், பொறாமையினால் பொங்குகின்ற பொல்லாங்கு மனிதர்களை இன்று அன்பால், அறிவால், ஆற்றலால், சிந்தனையால், செயலால், வீரத்தால், வியூகத்தால், விவேகத்தால் வெற்றிகொள்ளும் எனது அன்னை, தாழ்த்தப்பட்ட மக்களின் நம்பிக்கை நட்சத்திரம், தாய்குலம் போற்றும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசில் எங்களுடைய கபிலர்மலை தொகுதி, சேடர்பாளையம் அரசு உயர்நிலைப் பள்ளியானது சென்ற ஆண்டே மேல்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கு முடிவு எடுக்கப்பட்டு இறுதி நேரத்தில் ஒரு பெண்கள் பள்ளிக்குக் கொடுப்பதற்காக மாற்றப்பட்டுள்ளது. எனவே, இந்த ஆண்டு அருள்கூர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து, இதற்கென்று பணம் கட்டப்பட்டு பல ஆண்டுகளாகி உள்ளதால், இதற்கு முன்னுரிமை கொடுத்து முடிவு எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

[1995 ஏப்ரல் 18

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேடர்பாளையம் பள்ளியில் 563 மாணவர்களும், 378 மாணவியரும் பயின்று வருகிறார்கள். பத்தாம் வகுப்பில் 88 மாணவ மாணவியர்கள் பயில்கிறார்கள். இங்கேயிருந்து 15 கிலோ மீட்டர் தூரத்திலே பாண்டமங்கலத்திலேதான் ஒரு அரசு மேல்நிலைப் பள்ளி இருக்கிறது. அடுத்து, 14 கிலோ மீட்டர் தொலைவிலே பரமத்தியிலே ஒரு அரசு மேல்நிலைப் பள்ளி இருக்கிறது. ஆகவே, இங்கே அரசு மேல்நிலைப் பள்ளி ஒன்று தொடங்குவது அவசியம் என்பதை அரசு உணர்ந்து இருக்கிறது. இந்த ஆண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில், உயர்நிலைக் குழு இதனைப் பரிசீலித்து பரிந்துரை செய்யும். அதன் அடிப்படையிலே அரசு முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ப. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கபிலர்மலை தொகுதியானது பரமத்தி-வேலூர் தாலுகாவை உள்ளடக்கிய ஒரு முழு தொகுதியாக இருக்கிறது. அப்பகுதியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல பாண்டமங்கலம் மேல்நிலைப் பள்ளியில், அந்தப் பள்ளியில் படிக்கின்ற மாணவ மாணவிகளைத் தவிர, வேறு எந்த பள்ளி மாணவ மாணவிகளையும் சேர்த்துக்கொள்வது இல்லை. அதேபோன்று, பரமத்தியிலும் அதே பள்ளியில் படிக்கின்ற மாணவ மாணவிகளை தவிர மற்ற பள்ளிகளிலே இருக்கின்ற மாணவ மாணவிகளைச் சேர்த்துக் கொள்வது இல்லை. பெற்றோர்-ஆசிரியர் கமிட்டியினுடைய முழு முயற்சியின் காரணமாக கட்டிடங்களைக் கட்டி, அந்தப் பள்ளிகள் மிகவும் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தால் மதிப்பெண்கள் குறைவாக வாங்கியிருந்தாலும்கூட, பெற்றோர்-ஆசிரியர் கமிட்டியானது அப்பகுதி பிள்ளைகளை அங்கே சேர்த்தாக வேண்டும் என்று நிர்பந்திக்கின்ற காரணத்தினால் இந்த சேடர்பாளையம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக ஆக்காத காரணத்தினால் தாழ்த்தப்பட்ட மக்களும், பிற்படுத்தப்பட்ட மக்களும் நாமக்கல் பகுதிக்கு தங்களுடைய குழந்தைகளை அனுப்புவதை நிறுத்தி விடுகின்றார்கள். ஆகையினால், மேல் வகுப்புக்கு செல்லுகின்ற வாய்ப்பே இல்லாமல், அதிலும்

1995 ஏப்ரல் 18]

குறிப்பாக பெண்களை வீட்டோடு நிறுத்தி விடுகிறார்கள். அருகிலே காவிரி ஆறு ஓடுகின்ற காரணத்தினால் வேலை வாய்ப்பு அதிகமாக இருப்பதால், பெண்களை வேலைக்கு அனுப்பிவிடுகின்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இன்று பிள்ளைகள் படிப்பதற்காக, தாழ்த்தப்பட்ட பிள்ளைகளுக்கு உதவித் திட்டங்களைக் கொடுத்து ஊக்குவிக்கின்ற இந்த நல்லாட்சியில் பெண்களினுடைய முன்னேற்றத்திற்காக பாடுபடும் எங்கள் அன்னையின் ஆட்சியில் இந்தத் தொகுதியினுடைய மக்கள் நலன் காக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதி அளித்து, இந்த ஆண்டு கட்டாயமாக அப்பள்ளியை அரசு மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு ஆணையிடுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே இருக்கின்ற மாநிலங்களிலேயே தமிழகத்திலே மட்டும்தான் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பெண் கல்வியிலே அதிக அக்கறை செலுத்தி அதற்கான முன் ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையில் இந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்குவதற்காக சாத்தியக் கூறுகளை அரசு ஆராயும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பாண்டமங்கலம் அரசு மேல்நிலைப் பள்ளியிலும், பரமத்தி அரசு மேல்நிலைப் பள்ளியிலும் அந்தந்த பள்ளிகளிலே பயிலுகின்ற மாணவ மாணவியரைத் தவிர மற்றவர்களை அனுமதிப்பதில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அது தொடர்பாக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *336*, திருமதி கவிநிலவு தர்மராஜ், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

336—

அரச்சலூரில் மத்திய கூட்டுறவு வங்கி கிளை அமைத்தல்

37486*—திருமதி கவிநிலவு தர்மராஜ் :**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—